தி.தேவனூர் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை: திரு. கந்தன்

க எண்.1/2024 நாள்22.01.2024

பொருள்:

மனைப்பிரிவு அனுமதி முகையூர் ஊராட்சி ஒன்றியம் தி. தேவனூர் ஊராட்சி எல்லையில் சர்வே.எண்.57/1C ஆக கூடுதல் ஏக்கர் 1.42 செண்டு (அ) 5750 சதுரமீட்டர் கொண்ட வெற்றிவேல் நகர் மனைப்பிரிவுக்கான இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடுதல் சார்பு.

உத்திரவிடல் தொடர்பாக,

1) திருமதி. வித்யாதேவி க/பெ சரவணன் திருக்கோயிலூர் அவர்களின் விண்ணப்பம் நாள். 21.12.2023

2)அரசு ஆனை எண்.255 ஊரக வளர்ச்சி துறை (.C2) நாள் : 18.08.1997.

3) அரசாணை எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (UDA) (3) துறை நாள் : 04.05.2017

4) நகர ஊரமைப்பு உதவி இயக்குனர் விழுப்புரம் அவர்களின் ந.க.எண் 16628/TCP/2023 கமா (Online Application No. ZD99AK9U) (211/2023)

5) தி.தேவனூர் ஊராட்சி மன்ற தீர்மான எண். 48 நாள் ; 10.01.2024

6) தானப்பத்திரம் ஆவண எண் 6031/2023, நாள் . 23.11.2023

7) இந்தியன் வங்கி திருக்கோயிலூர் கருவூல செலுத்திய நாள் : 12.01.2024

உத்தரவு:-

முகையூர் ஊராட்சி ஒன்றியத்திற்க்கு உட்பட்ட தி.தேவனூர் ஊராட்சி எல்லையில் சர்வே எண். 57/1C ஆக கூடுதல் ஏக்கர் 1.42 செண்ட் (அ) 5750 சதுர மீட்டர் பரப்பளவில் மனைப்பிரிவு அமைக்க பார்வை 1ல் காணும் கடிதத்தின் படி விண்ணப்பித்துள்ளார். பார்வை 4ல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர் விழுப்புரம் அவர்களின் ந.க.எண். 16628/TCP/2023 கமா (Online Application No. ZD99AK9U) (211/2023) ன் கூராய்வு கட்டணம் ரூ.1000/- மற்றும் நிலம் பயன்மாற்றுக்கட்டணம் உரிய தலைப்பில் செலுத்திய பின் அனுமதி

Scanned with OKEN Sca

வழங்கலாம் என தெரிவித்துள்ளார். அனுமதி கோரும் இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகை நிலப்பயன் மாற்றுக்கட்டணமாக உரிய அரசு தலைப்பில் செலுத்தி அதற்கான கட்டணம் ரூ.42,600/- வங்கி பரிவர்த்தனை மூலம் உரிய தலைப்பில் செலுத்தியுள்ளார்.

மேற்படி மனைகளுக்கு தமிழ்நாடு 1994 ஆம் வருட ஊராட்சி சட்டம் பிரிவு 2(சி)ன் படியும் பார்வை 2ல் காணும் அரசாணையின்படி கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு மனைப்பிரிவு அமைக்க அனுமதி வழங்கி இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

வ.எண்.	விஸ்தீரணம்	வழிகாட்டி மதிப்பு சதுரடி ரூ.	3% நில மாற்றுக்கட்டணம் ரூ.
1	1.42 ஏக்கர் (அ) 5750 சதுர மீட்டர்	23	42,600/-

நிபந்தனைகள்:-

1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர், விழுப்புரம் அவர்களின் 16628/ TCP/2023 கமா (ZD99AK9U) (211/2023) உத்திரவில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி அனுமதி வழங்கப்படுகிறது.
2. ஊராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் மாறாக மனையின் அளவுகள் சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றம் செய்யக்கூடாது.
3. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.
4. பொதுபயன்பாட்டிற்க்காக உள்ளாட்சியில் ஒப்படைக்கப்பட்ட தெருக்கள், பூங்கா மற்றும் பொது இடத்தில் எந்தவித மாற்றமும் செய்யக்கூடாது.
5. மனுதாரர் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடைத்தை எவ்வித மாற்றம்/விடுதலையின்றி மனைப்பிரிவு நுழைவு வாயிலில் 6X4 அளவிலான நிரந்தர தகவல் பலகை பொது மக்கள் பார்வைக்காகவும் மேலும் மனைப்பிரிவு அங்கீகரித்த ஊராட்சி மன்ற தீர்மான எண் தெளிவாக குறிப்பிட்டு தகவல் பலகை வைக்கப்பட்ட வேண்டும்.

6. இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள், இவ்வரை படத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு அனுமதிக்கப்படவேண்டும்.

மேற்கானும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு தி.தேவனூர் ஊராட்சி எல்லையில் 57/1C ஆக கூடுதல் ஏக்கர் 1.42 செண்ட் (அ) 5750 சதுர மீட்டர் கொண்ட பரப்பளவு அமைந்துள்ள 33 மனைகளுக்கு மட்டும் இறுதி ஒப்புதல் அளித்து உத்திரவிடப்படுகிறது.

தலைவர்
தி. தேவனூர் ஊராட்சி தலைவர்
தி.தேவனூர் ஒன்றியம்

பெறுதல்;

திருமதி வித்யாதேவி க/பெ. சரவணன், திருக்கோயிலூர்

நகல்;

1. சார்பதிவாளர் அவர்கள், சார்பதிவாளர் அலுவலகம், அரகண்டநல்லூர்
2. வட்டாட்சியர் அவர்கள், வட்டாட்சியர் அலுவலகம், கண்டாச்சிபுரம்
3. உதவி இயக்குனர் (ஊராட்சிகள்) விழுப்புரம் அவர்களுக்கு, தகவலுக்காக பணிந்து
4. உதவி இயக்குனர் (நகர ஊரமைப்பு) கடலூர் மண்டலம் அவர்களுக்கு தகவலுக்கார்க பணிந்து அனுப்பப்படுகிறது.